*Registered as a News Paper* பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 01 16 - 07 - 1992 வியாழக்கிழமை ஓசை 149

## வீதியோர வியாபாரிகளுக்கு 60 புதிய கடைகள்

யாழ். நகர வீதியோர வியாபாரிகளுக்கு யாழ். பெரியகடைப்பகுதியில் புதிய கடைத் தொடர்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இக்கடைத் தொடர் மிக விரைவில் செயற்படத் தொடங்க உள்ளனவென்று யாழ். மாநகரசபை அதிகாரிகள் தெரிவித்தனர். மேற்படி பகுதியில் சுமார் 60 கடைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை வாடகைக்குப் பெற்றுக் கொண்டு தமது வர்த்தகத்தை தொடங்குவதற்கு வசதியாகவே இம் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது யாழ் நகரின் வீதியோரங்களில் இதுவரை காலமும் செயற்பட்டுவந்த வீதியோரவியாபார நிலையங்கள் தொடர்ந்தும் அப்பகுதியில் செயற்படுவதற்கு தடைவிதிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (சு)(பா)

# கிளாலி பகுதியில் பீப்பா குண்டுவீச்சு; நீரேரிப் பாதையை துண்டிக்க முயற்சி

## பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

எக்கலயிலுள்ள வீட்டில் ஒரு தொகை ஆயுதங்களுடன் பிடிபட்ட சுவிற்சலாந்து பிரஜையான அலன் கிரிஸ்ரின் நீர்கொழும்பு சிறையில்பலத்த பாதுகாப்புள்ள பகுதிக்குமாற்றப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் இவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பகுதியில் சுவிஸ், பிரெஞ் மொழிகளில் சூகசமாக எழுதப்பட்ட கடிதங்கள் சிறை அதிகாரிகளி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கரையோரங்கள் மீது பீரங்கித் தாக்கு

(கிளாலி)

சிறிலங்கா விமானப்படை விமானமொன்று நேற்று கிளாலிப் பகுதியில் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டது. இத்தாக்குதலில் ஈடுபட்ட அவ்ரோ ரக விமானம் கரையோரப் பகுதியில் பல பீப்பாக் குண்டுகளை வீசியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதே வேளை குடா நாட்டின் பல பகுதிகள் மீது எறிகணை வீச்சும் இடம் பெற்றது.

ஊரியான் - கொம்படிப் பாதைகள் இராணுவத்தினால் தடுக்கப்பட்டதைத் தொடர்ந்து கிளாலிப்பாதை ஊடாக மககள் போக்குவரத்தை மேற்கொண்டமை தெரிந்ததே, தற்பொழுது இப் பாதையையும் மூடிவிடும் நோக்கில் நேற்று முன் தினம், யாழ். கடல் நீரேரியை தடை செய்த பிரதேசமாக அறிவித்த சிறிலங்கா இராணுவத்தினர், நேற்று கிளாலி கரையோரத்தின் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நேற்று நண்பகலில் இடம் பெற்ற இத் தாக்குதலில் அவ்ரோ ரக விமானமொன்று தொடர்ச்சியாகப்பல பீப்பாக் குண்டுகளை வீசிச் சென்றது.

இக் குண்டு வீச்சால் பொது மக்களுக்குக்குப் பாரிய சேதம் எதுவும்ஏற்பட்டதாகத்தெரிய வரவில்லை.

இதேவேளை மண்டைதீவு கடற்பகுதியில் நிலை கொண்டிருந்த சிறிலங்கா கடற்படையின் பீரங்கிப் படகுகள் நேற்று இரண்டு முப்பது மணியளவில் கரையோரப்பகுதிகளை நோக்கி பீரங்கி குண்டுகளை வீசின. இதேவேளை ஐம்பது கலிபர் துப்பாக்கிப் பிரயோகமும் இப் படகுகளிலிருந்து மேற்கொள்ளப்பட்டது

இதனிடையே காரைநகர் கடற்படைத் தளத்திலிருந்து பொன்னாலை நோக்கியும், பலாலி இராணுவ தளத்திலிருந்து அச்சுவேலிப் பகுதியை நோக்கியும், எறிகணைத்தாக்குதல்கள் இராணுவத்தினரால் நடத்தப்பட்டுள்ளது.

அத்துடன், நேற்று பளைப் பகுதியில் உலங்கு வானூர்தி ஒன்றும் நோட்டமிட்டுச் சென்றது.

## திருமலையில் 3 தமிழ்பெண்கள் முஸ்லிம்களால் கடத்தல்

திருக்கோணமலை மாவட்டம் தம்பலகமம் சிவன் கோயிலடி அகதி முகாமிலிருந்து மூன்று இளம் தமிழ்ப் பெண்கள் முஸ்லிம் சமூக விரோதக் கும்பலால் கடத்திச் செல்லப் பட்டுள்ளனர்.

இந்த அகதி முகாமிலுள்ள தமிழர்களை முஸ்லிம்களாக மதம் மாறி விடும்படி இங்கு அத்து மீறிப் பிரவேசிக்கும் முஸ்லிம் சமூக விரோதிகள் நிர்ப்பந்தித்து வருவதாகவும், தெரிய வருகின்றது. இதனையடுத்து மூன்று இளம் தமிழ்ப் பெண்கள் கடத்திச் செல்லப் பட்டுள்ளனர்

இதேபோல் பச்சனூர் பகுதியிலும் முஸ்லிம்கள் முன்னர் அடாவடித்தனமான செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தது தெரிந்ததே.

## இயக்கச்சி மோதலில் மேஜர் பாலா வீரச்சாவு

## பொறுத்திருந்து பார்க்கவும்

(கொழும்பு)

புதுக்குடியிருப்பு கண்டாவளைப் பகுதியில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதன் நோக்கத்தை பொறுத்திருந்து அவதானிக்கும்படி சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்கா கேட்டுள்ளார்.


## சாமிமலைக் கொள்ளை; இரு இராணுவத்தினர் கைது

(கொழும்பு)

சாமிமலை கொள்ளை முயற்சி தொடர்பாக பொலிசாரால் கைது செய்யப்பட்ட இருவரும் சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் ஆகும். கடந்த ஞாயிறன்று இடம் பெற்ற இச்சம்பவம் தொடர்பாக கைதாகிய இராணுவத்தினர் இருவரும் கடந்த ஒரு மாத காலமாக கடமைக்கு செல்லவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பொலிசார் மேலும் தகவல் தருகையில்; கொள்ளை முயற்சி நடைபெற்ற கடை முதலாளியும் அவரது மனைவியும் கத்திக்குத்துக்கு இலக்காகியுள்ளனர். இவர்களது அலறல் ஓசைகேட்டு ஓடிவந்த அயலவர் மீது கைக்குண்டு வீசப்பட்டதில் ஒன்பதுபேர் எரிகாயங்களுக்குள்ளாகினர். கைக்குண்டை வீசிவிட்டு வீதியால் வந்துகொண்டிருந்தவரின் மோட்டார் சைக்கிளைப் பறித்துக் கொண்டு மஸ்கெலியா நோக்கித் தப்பிச் சென்றிருக்கின்றனர். இவர்களை பொலிசார் விரட்டித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட போது அவர்கள் மோட்டார் சைக்கிளைக் கைவிட்டு தேயிலைப் பற்றைக்குள் ஓடி மறை

(4ஆம் பக்கம் பார்க்க)



இயக்கச்சிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் கடந்த 14 ஆம் திகதி எதிர்பாராத விதமாக ஏற்பட்ட நேரடி மோதலில் மேஜர் பாலா (கிருஷ்ணன் குணபாலசிங்கம்-புத்தூர் யாழ்ப்பாணம்) வீரச்சாவடைந்தார்.



வீரச்சாவடைந்த இவ் வேங்கைக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவிதது்க் கொள்கின்றனர்.

## 18 முஸ்லிம்கள் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசாங்கத்திற்கு சொந்தமான பஸ் ஒன்றை வழிமறித்த ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்று தாக்கியதில் இதில் பயணம் செய்த 18 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர் என்றும், ஐந்துபேர் காயமடைந்தனர் என்றும் இந்திய வானொலி தெரிவித்தது.

இந்தப் பயணிகளை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தலைவர்களின் ஒற்றுமையே பிரச்சினைக்கு தீர்வுகாணும்

### - நெவில் பெர்னாண்டோ

''தற்போதைய நெருக்கடியில் இருந்து இந்த நாட்டைக் காப்பாற்ற வேண்டுமானால் இலங்கையிலுள்ள அரசியல் தலைவர்கள் அனைவரும் தமது அரசியல் கோட்பாடுகளைக் கைவிட்டு ஒன்றிணைய வேண்டும்.'' என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் களுத்துறை மாவட்ட எம். பி. யான நெவில்பெர்னாண்டோ அழைப்பு விடுத்துள்ளார்.

பாணந்துறையில் நடைபெற்ற பொது நிகழ்ச்சியொன்றில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்; இவ்வாறு அரசியல் தலைவர்கள் ஒன்றிணைந்தால் மட்டுமே பிரச்சினைக்கு யதார்த்தமான தீர்வொன்றைக்காண முடியும் என்றும்,

இவ்வாறு இணைந்து தீர்வொன்றைக் காணாது விட்டால் இந்நாட்டின் எதிர்காலம் மிகுந்த ஆபத்துக்குள்ளாகும் என்றும் தெரிவித்தார்.



வண்ணான்குள இராணுவமுகாம் தகர்ப்பின் போது புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் ஒரு பகுதி.

## கறுக்காய் மோதலில் இரு புலிகள் வீரச்சாவு

ஆனையிறவு கறுக்காய்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் கடந்த 14 ஆம் திகதி [illegible]



கப்டன் தேனுகா



கப்டன் சாதனன்

ஏற்பட்ட நேரடி மோதலில் இரு வேங்கைகள் வீரச்சாவை தழுவிக் கொண்டனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வேலைவாய்ப்பு மோசடி; இருவர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

திருக்கோணமலையைச் சேர்ந்த ஐந்து பேரை வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாக மாலைதீவிற்கு அழைத்துச் சென்று அநாதரவாக விட்டுத் தலைமறைவாகிய இரு சந்தேக நபர்களை புறக்கோட்டைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

மாலைதீவில் அநாதரவாக விடப்பட்ட இந்த ஐவரும் மிகவும் கஷ்டத்திற்கு மத்தியில் கொழும்பு திரும்பி புறக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

ஒவ்வொருவரிடமும் தலா இருபத்திரண்டாயிரம் ரூபா வீதம் சந்தேக நபர்கள் பெற்றுள்ளதாகவும், இது குறித்து புறககோட்டை பொலிஸ் நிலையத்தினர்விசாரணையில் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# தடுதது வைக்கப்பட்ட 10 பேர் புலிகளால் நேற்று விடுதலை

(நமது நிருபர்)

பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டமைக்காக தமிழீழ விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த பத்துக் கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

நேற்று விடுதலைப்புலிகளின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் மேற்படி கைதிகளின் உறவினர்கள் மற்றும் பத்திரிகையாளர் முன்னிலையில் இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

மேற்படி குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் தீவகம், வலிகாமம், மற்றும் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது. (பா)

## தீயசக்திகளிடமிருந்து மக்களைப் பாதுகாக்க அனைவரும் இணைவோம்

### - தங்கன்

(யாழ்ப்பாணம்)

''எமது மண்ணைக் கைப்பற்றுவதற்கும் எமது மக்களை கொன்றொழிப்பதற்கும் பல்வேறு தீய சக்திகள் எம்மைச் சூழ்ந்து நிற்கின்றன. இவ்வாறான சக்திகளிடமிருந்து எமது மக்களை பாதுகாப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்'' இவ்வாறு நேற்று விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கைதிகள் விடுதலை வைபவத்தில் பேசிய யாழ். மாவட்ட உதவி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. தங்கன் தெரிவித்தார்.

குற்றச் செயல்களில் ஈடுபட்டமைக்காக கைது செய்யப்பட்டவர்கள் நன்நடத்தை முகாமில் சேர்க்கப்பட்டு ஒழுக்க சீலர்களாக மாற்றப்பட்டு வருகின்றனர். அத்துடன் தத்தமது தொழில்துறைகளில் பயிற்சியும் வழங்கப்படுகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 10 மேற்பட்ட வர்த்தகர்கள் தென்மராட்சியில் கைது

தென்மராட்சிப் பகுதியில் அத்தியாவசிய பொருள்களை அதிகவிலையில் விற்றமைக்காக பத்துக்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் தமிழீழ காவற்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாவர்கச்சேரி நவீனசந்தைப் பகுதியில் ஏழுபேரும், கொடிகாமச் சந்தைப் பகுதியில் மூன்றுபேரும் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சவர்க்காரம், பால்மா போன்ற பொருள்களைக் கூடிய விலையில் விற்பனை செய்தபோதே இவர்கள் கையும்மெய்யுமாக பிடிபட்டனர். இவர்கள் நீண்ட காலம் தடுத்து வைக்கப்படுவார்கள் என காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டபொருள்கள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. (35)

#### சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள்

## வாரத்தில் 5 நாட்களும் பாடசாலை செல்ல வேண்டும்

யாழ். மாவட்டத்தில் ஆண்டு 6 - 11 வரையிலான சகல பாடசாலைகளுக்குமுரிய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் வாரத்தில் ஐந்து நாட்களும் பாடசாலைத் தரிசனத்திற்குச் செல்லவேண்டும். மேலும் இவர்கள் அந்தந்தக் கோட்ட கல்விப் பணிமனையுடன் இணைக்கப்பட்டுள்ளனரெனவும் யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு.

(4 ஆம் பக்கம் பார்க்க

### விமான விபத்து

தென்மேற்கு ஆசியநாடான யேமனின் தெற்கிலுள்ள வாடன் நகருக்கு அருகே இராணுவ விமானத்தில் ஏற்பட்ட விபத்தில் விமானத்திலிருந்த 68 பேர் உயிரிழந்தனர் என்று

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு லட்சம் பற்றரிகளுடன் இரு லொறிகள் பிடிபட்டன

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்கு இரு லொறிகளில் கடத்திச் செல்லப்படவிருந்த ஒரு லட்சம் டோர்ச்பற்றரிகளையும், ஐயாயிரம் கற்பூரம் பக்கற்றுகளையும் கொழும்பு முகத்துவாரப் பொலிசார் நேற்று முன்தினம் கைப்பற்றியுள்ளனர் என்று கொழும்புப் பத்திரிகைகள் குறிப்பிட்டுள்ளன.

இது தொடர்பாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூன்று

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டர் சேவை

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தன் உற்சவ தினத்தை முன்னிட்டு இம்முறையும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் தொண்டர்களின் சேவை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் மூன்றாம் திகதி நல்லூர் கந்தன் உற்சவம் ஆரம்பமாகின்றது. அன்று முதல் உற்சவத்திற்கு வரும் பக்தர்களை கண்காணிக்கவும் வீதி ஒழுங்குகளைக் கவனிக்கவும் தொண்டர்களின் சேவை இடம்பெறவுள்ளது.

யாழ். மாநகசபை ஆணையாளரின் வேண்டுகோளுக்கிணங்கசென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரதேச ஆணையாளர் திரு. செ. செல்வரஞ்சன்இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகிறார். (ச)

## இறுதிப் போட்டிக்கு சென். பற்றிக்ஸ் தெரிவு

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ். கிரிக்கெட் சபையினால் நடத்தப்பட்டு வரும் பாடசாலைகளுக்கிடையிலான 15 வயதிற்கு உட்பட்டவர்கள் கிரிக்கெட் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி அதனை எதிர்த்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரியை 4ஓட்டங்களால் வெற்றியீட்டி இறுதி ஆட்டத்தில் பங்குபற்ற தகுதிபெற்றுள்ளது இப் போட்டி சனிக்கிழமை 11 ஆம் திகதி இடம்பெற்றது.

## சமுகமளிக்கவும்

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்விக் கோட்டப் பகுதியில் உள்ள எட்டு கொத்தணிகளிலும் 11ஆம் ஆண்டு வரை வகுப்புக்கள் இயங்கும் சகல பாடசாலை அதிபர்களையும் 16ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் தவறாது சமுகமளிக்கும்படி வடமராட்சி கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு எஸ். செல்லத்துரை அறிவித்துள்ளார். (25)

## இலவச கண்ணாடி விநியோகம்

(தென்மராட்சி)

கண்பார்வை குறைந்த வறிய மக்களுக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் இலவச மூக்குக் கண்ணாடிகளை வழங்கி வருகின்றனர். இதுவரை 150 பேருச்கு இவ்வாறு கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன. இவை சாவகச்சேரி டிறிபேர்க்கல்லூரியில் வைத்து வழங்கப்பட்டன. மேற்படிகண்ணாடிகளைப் பெற விரும்புவோர்

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில் 06 — 01 — 1963



மின்னலாய் 16 — 07 — 1991

### குயிலன்

**( இரத்தினம் வர்ணகுலசிங்கம் )**

ஊறணி வல்வெட்டித்துறை

விடுதலை என்பது நிச்சயம் - நம் தமிழர்
படும் துன்பம் கண்டு எழுந்தனர் வீரவேங்கைகள்
நம் மண்மீட்பிற்காக எத்தனை எத்தனை தியாகங்கள்
குயிலனும் குயிலாய் பாடிப் பாடித் திரிந்தான்
திமிர்கொண்ட அரசை திக்குத் தெரியாமல்
ஓடவைத்தனர்,
மண்ணிற்காக தன்னையும் அர்ப்பணித்தான்
''வர்ணகுலசிங்கம்''

தமிழீழ தாயக மண்மீட்பிற்காக பல ஆண்டுகாலமாக தன் சகோதரங்களை நேசித்ததைவிட விடுதலைப்புலி சகோதரர்களை நேசித்து, பாடு பட்டு தவறுதலாக 16 - 07 - 1991 பொலிகண்டியில் ஏற்பட்ட வெடிவிபத்தில் மின்னலாய் வீரசொர்க்கம் அடைந்தார்.

அன்னாரின்ஓராண்டு நினைவஞ்சலியில் எமது அஞ்சலியை செலுத்துவோமாக

பெற்றோர், சகோதர சகோதரிகள்,
மச்சான், மருமகன், நண்பர்கள்.

( 2795 )

## ஓராண்டு நினைவஞ்சலி

மாதா மடியில்
1913 - 09 - 10

மாதகல் மண்ணில்
1991 - 07 - 16



அமரர்

### திரு· சந்தியாப்பிள்ளை சுவாம்பிள்ளை (முத்துத்தம்பி)

எங்கள் அப்பையாவே!
நோயுற்று இராமல் நொந்து மனம் வாடாமல்
பாயில் கிடவாமல், மின்னாமல் முழங்காமல்
மறைந்ததெங்கே?
மண்ணில் நீங்கள் மறைந்தாலும்
கண்ணில் நீங்கள் நடமாடும்

## நினைவு கூருகின்றோம். .

## 1992 - 07 - 16

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் பெருவெளியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

★ **ஜெய்சங்கர்** (இருதயபுரம், மூதூர், திருக்கோணமலை.)

★ **இராசநாயகம்** (மணற்சேனை, திருக்கோணமலை.)

★ **சின்னத்துரை குணநாயகம்** (பெரியவெளி, திருக்கோணமலை.)

★ **மு. அருளம்பலம்** (பெரியவெளி, திருக்கோணமலை.)

திருக்கோணமலை / மூதூர், மல்லிகைத் தீவுப் பகுதியில் இடம்பெயர்ந்தோர் முகாமொன்றை முற்றுகையிட்ட சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட -

★ **கோணாமலை இராசநாயகம்** (மல்லிகைத் தீவு, மூதூர், திருக்கோணமலை.)

மணலாறு நெடுங்கேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

**லெப். ராஜ்குமார்** (சூசைப்பிள்ளை ஆசீர்வாதம்-மணற்குடியிருப்பு, முல்லைத்தீவு.

**சசி** (விசுவநாதன் சிவலிங்கநாதன் - வவுனிக்குளம், மாங்குளம், முல்லைத்தீவு.)

திருக்கோணமலை, மூதூர்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட குழந்தைகள், பெண்கள் மற்றும் இடம்பெயர்ந்தோரான 30 பேர் உட்பட மணற்சேனை, பச்சனூர், பெருவெளிப் பகுதிகளைச் சேர்ந்த 67 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

**சுமன்** [குமாரசாமி சந்திரசேகர் - கிளிநொச்சி[

**மோகன்** [கிளிநொச்சி]

அம்பாறை / பொத்துவில், இன்ஸ்பெக்டர் ஏத்தம் பகுதியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

★ **ஜெயா** (க. ஜெயசீலன் பொத்துவில், அம்பாறை.)

சுளிபுரத்தில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**கப்டன் காசிம்** (பிரஞ்சிப்பிள்ளை ஜெகநாதன் - வாழ்க்கைப்பட்டான் கண்டல், முருங்கன், மன்னார்.)

கிளிநொச்சி - செல்வநகர்ப் பகுதியில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோத சக்திகளுடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**ஜெயக்கொடி** (நாராயணன்பிள்ளை ஜெயச்சந்திரன் - செல்வநகர், கிளிநொச்சி.)

அம்பாறை றொட்டைப் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழ் விவசாயிகள்.

1989 ஆம் ஆண்டு அம்பாறை 35-ம் கிராமம் பகுதியில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**தயாளன்** (கணபதிப்பிள்ளை கோபால்ரத்தினம் - துறைநீலாவணை, மட்டக்களப்பு.)

**சீராகரன்** (நீலாவணை, மட்டக்களப்பு.)

**ஈஸ்வரன்** (ஆரையம்பதி, மட்டக்களப்பு.)

1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பு பாலையடி வெட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

**லெப. கேணல் றீகன்** (இராசையா சிற்றம்பலம்-வெல்லாவெளி, மட்டக்களப்பு.)

யாழ். கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**லெப். ஜிம்பிறவுண் சின்னவன்** (பரராஜ

## தப்பிச்சென்ற ஜே.வி.பி.யினர் 24 மணி நேரத்தில் கைது

(கொழும்பு)

பெலவத்தை தடுப்புக்காவல் முகாமிலிருந்து தப்பியோடிய அதி தீவிர ஜே. வி. பி. உறுப்பினர்கள் ஏழு பேர் தப்பிச் சென்று 24 மணித்தியாலங்களுக்குள் கடந்த சனிக்கிழமை மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளனர் என சிறிலங்கா பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீகஹதென்ன பொலிசார் இவர்களை கைதுசெய்தனர் என்றும், தப்பியோடியவர்களில் இருவர் சில மணித்தியாலங்களுக்குள் கைது செய்யப்பட்டனர் என்றும், இந்த இரு சந்தேக நபர்களையும் விசாரணைக்குட்படுத்தியபொலிசார் பஸ்ஸொன்றில் கொழும்புக்கு தப்பிச்சென்று கொணடிருந்த ஐவரை வீதித்தடை போட்டு பஸ்ஸை வழிமறித்துக் கைது செய்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சென்றலைட்ஸ் வெற்றி பெற்றது

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் யாழ். வர்த்தக வங்கி அணிக்கும் இடையில் திங்கட்கிழமை 13 ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற மென்பந்து கிரிக்கெட் போட்டியில் சென்றலைட்ஸ் வி. கழகம் வெற்றியீட்டியது.

சென்றலைட்ஸ் அணி 12 ஓவர்களில் 5 விக்கெட்டு இழப்பிற்கு 42 ஓட்டங்களைப் பெற்றனர் வர்த்தக வங்கி அணி 11 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 40 ஓட்டங்களைப் பெற்றனர்.

## ஓராண்டு நினைவஞ்சலி



மாவீரன்

### 2-வது லெப்டினன் சங்கர்

(வாரி - ஜெயந்திரன் (துதி)

தாயின் மடியில் 12-06-1971

தாயக மீட்பில் 16-07-1991

அன்புச் செல்வமே
எங்கள் வீரத் தெய்வமே
வெற்றிலைக் கேணிதனில் வீரகாவியம்
படைத்தவனே
நீ சென்று ஓராண்டு ஆகுதடா
ஆனால் எம் மனமோ ஆறவில்லை
உன் அன்னை சிந்தும் கண்ணீரில்
அலை ஒன்று பாயுதடா
நீ சென்ற பயணம் முடியும் வரை
எம் வீரர் பின் தொடர்வார்.
இது நிச்சயம்.

குடும்பத்தினர், போராளிகள்.
நாவற்குழி சந்தி, கைதடி. (2817) உறவினர்.

**புஸ்ப்பன்** (நடராசா குலேந்திரன்-நாவற்குழிதெற்கு, கைதடி, யாழ் )

**யசோ** (லோகேஸ்வரன் சுதாகர் - மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம்)

**அனுசன்** (தேவசகாயம் குணசிங்கம் - 60/03, டேவிற்

...ங்கப்பட்டன். மேற்படிக்கண்ணா டிகளைப் பெற விரும்புவோர் தமது விண்ணப்பங்களை சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரிடம் சமர்ப்பிக்குமாறுகேட்கப் பட்டுள்ளனர். (35)

## தடகள விளை. போட்டி

(தென்மராட்சி)

தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களிற்கிடையேயான தடகள விளையாட்டுப்போட்டி எதிர்வரும் சனி ஞாயிறு ஆகிய தினங்களில் மட்டுவில் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை சாவகச்சேரி உதவி அரச அதிபர் திரு. பூ. சுந்தரம்பிள்ளை மேற்கொண்டுள்ளார். (35)

## ஆங்கில தினப் போட்டி

(கோப்பாய்)

கோப்பாய் மகா வித்தியாலயத்தில் ஆங்கில மொழி தினப் போட்டிகள் அண்மையில் பாடசாலை அதிபர் திரு. க. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

★ ★ ★

(பருத்தித்துறை)

கரணவாய் பொன்னம்பல வித்தியாலய ஆங்கிலதினவிழா வித்தியாலய அதிபர் திரு. க. பொன்னையா தலைமையில் நடைபெற்றது. இவ் ஆங்கில தின விழாவிலே உடுப்பிட்டி கொத்தணி அதிபர் திரு. ந. அனந்தராஜ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். வித்தியாலய ஆங்கில ஆசிரியர்களான திருமதி. ந. கதிரவேலு, திரு. ச. கிருஸ்ணர், திரு. க. செல்வநாயகம் ஆகியோர் இவ் ஆங்கில தின விழாவுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். இவ் வித்தியாலயத்தில் இம்முறைதான் முதற்தடவையாக ஆங்கில தினவிழா நடைபெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது. ( 25 )

மண்ணில் நீங்கள் மறைந்தாலும்
கண்ணில் நீங்கள் நடமாடும்
காட்சி தான் மறைந்திடுமோ
எண்ணமதில் என்றும் நீங்கள்
எங்களுடன் வாழ்கின்றீர்கள்.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து நிற்கும்.

கனால் வீதி,
மாதகல்.
(2816)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
உற்றார், உறவினர்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் :
13 - 06 - 1974

தமிழீழத் தாய் மண்ணில் :
16 - 07 - 1991

## வீரவேங்கை பப்பா

(செல்வம் கணேஸ்)

தமிழினம் இன்னல் கண்டு தாங்கிடமுடியாததாகி
விடுதலை வேங்கையாக கட்டைக்காட்டினிலே
வேங்கை நீ மடிந்ததில்லை - உன்
வீரமும் குறைந்ததில்லை
ஓங்கிய போர் முறையில் - நீ
ஒதுங்கியும் நின்றதில்லை
பகைவரை வீழ்த்தும் வேளை
தாங்கினாய் நெஞ்சிற் குண்டை
தமிழ் அன்னை சிலிர்த்தே போனாள்

இவருடன் களப்பலியடைந்த சகபோராளிகளினதும் ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று [ 16-07-92 ] நிகழும் நினைவஞ்சலியில் இயக்க உறுப்பினர்கள், உறவினர்கள் யாவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

No.52, கமல் லேன்,
முஸ்லிம்தெரு, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
(2812)

**லெப். ஜிம்பிறவுண் சின்னவன்** (பேராஜசிங்கம் மகேந்திரா - மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.)

மாங்குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**குணம்** (செல்வரத்தினம் சுரேஸ்குமார் - சுரேஸ்குமார் வீதி, ஐந்துவேம்படி, தாவடிதெற்கு.)

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட சேனைக்குடியிருப்பு 01ஐச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

மட்டக்களப்பு மகிழடித்தீவுப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானக் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட 5 தமிழர்கள்,

1991 ஆம் ஆண்டு ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆ. க. வெளி. நடவடிக்கையின்போது அப்பகுதி இராணுவத்தினருக்குத் துணையாக வெற்றிலைக்கேணியில் தரையிறக்கப்பட்டு முன்னேற முற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். லக்ஸ்மன்** (கிருஸ்ணன் இராமச்சந்திரன் - தென்மூலை, அச்சுவேலி, யாழ்.)

**மேஜர் யசின் / யாசீர்** (கந்தசாமி சிவதாஸ் (சின்னப்பொடி) - உசன், மிருசுவில், சாவகச்சேரி, யாழ்.)

**கப்டன் டயஸ்** (யஸ்ரின் றோஜ்பேபியன்-கரம்பொன், ஊர்காவற்றுறை, யாழ்.)

**கபடன் கில்** (சண்முகம் தபேந்திரன் - செல்வபுரம் வடக்கு. வவுனிக்குளம், மாங்குளம், முல்லைத்தீவு)

**லெப்.வினோத்** (மோகனதாஸ் சுரேஸ் நிரஞ்சன் - கேணிப்புலம் ஒழுங்கை, மயிலிட்டி, யாழ்.)

**2-ம்லெப்.மௌலி** (தாமோதரம்பிள்ளை மாணிக்கவாசகன் - கோணாவளை ஒழுங்கை, கொக்குவில்கிழக்கு யாழ்.)

**2-ம்லெப்.சங்கர்/துதி** (வடிவேல் ஜெயந்திரன் - நாவற்குழிச் சந்தி, யாழ்.)

**2-ம்லெப்.காண்டீபன்** (வயிரவப்பிள்ளை உமாநேசன் - உடுத்துறை, தாளையடி, யாழ்.)

**விக்னேஸ்** (பாலசிங்கம் மால்மருகன் - வட்டுக்கோட்டை கிழக்கு, யாழ்.)

**விசித்திரன்** (நிற்சிங்கர் வல்லிபுரநாதர் - தட்டாங்குளம் வீதி, மீசாலை வடக்கு, யாழ்.)

**ராவ்** (சின்னையா யோகேஸ்வரன் - எடுவில், களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு)

**அஜந்தன்** (அல்போன்ஸ் சேகர் - மெமோறியல் வீதி, மானிப்பாய், யாழ்.)

**சதீஸ்** (தம்பையா யோகநாதன் - நாவற்காடு, வரணி, யாழ்.)

**குமரப்பா** (பாலசுப்பிரமணியம் சிவபாலன் - பன்னாலை, தெல்லிப்பழை, யாழ்.)

**சுகந்தன்** (பூபாலசிங்கம் பூலோகச்சந்திரன் - புன்னாலைக்கட்டுவன் வடக்கு, யாழ்.)

**சிறிரங்கன்** (யோகதாஸ் நேசராசா - துன்னாலை வடக்கு, யாழ்.)

**அனுசன்** (தேவசகாயம் குணசிங்கம் - 60/03, டேவிற் வீதி, குருநகர், யாழ்ப்பாணம்)

**பப்பா** (செல்வம் கணேஸ் - 53, கமால் ஒழுங்கை, யாழ்ப்பாணம்)

துணைப்படைவீரர் —

**குட்டி** (கணேசலிங்கம் சபேசன் - மூத்தவினாயகர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்)

மணலாற்றில், சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**மேஜர் வீமன்** (உ. சோலை விக்கினேஸ்வரன் - சகாய வீதி, அடம்பன், மன்னார்)

**கப்டன் இளங்கோ** (கனகராசா ஜெயந்தன் - பாரதி வீதி, கம்பர்மலை, வல்வெட்டித்துறை, யாழ்.)

**கப்டன் பிளாஸ்ரிக்கோ** (பேரின்பராசா ஜீவானந்தராசா-மேன்காமம், கிளிவெட்டி, மூதூர், திருக்கோணமலை)

**லெப்.நிக்சன்** (ஜெயபாலன் அன்னராசா - 10-ம்வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு)

**2-ம் லெப்.கௌரிகரன்** (யோகராசா மகேந்திரன் - கோபாலபுரம், நிலாவெளி, திருக்கோணமலை)

**2-ம்லெப்.யோகராசா** (கந்தையா நாகேந்திரம் - 2-ம் குறிச்சி, பழுகாமம், மட்டக்களப்பு)

**தியாகலிங்கம்** (நாகலிங்கம் ஜெயலிங்கம் - மூளாய், சுளிபுரம், யாழ்.)

**கட்டப்பொம்மன்** (மரியாம்பிள்ளை ராயன்-சாலைத்துறை, குருநகர், நெடுந்தீவு, யாழ்.)

**மூர்த்தி** (தம்பிராசா அனிதராஜா - வராத்துப்பளை, பருத்தித்துறை, யாழ்.)

**கனகசபாபதி** (பாண்டியன் நாகேந்திரம் - கள்ளப்பாடு, முல்லைத்தீவு)

**ராமராஜ்** (பேரின்பம் கணேசமூர்த்தி - காந்திபுரம், பளுகாமம், மட்டக்களப்பு)

**சூரன்** (சிவலிங்கம் குமார் - கிருஸ்ணன் கோயிலடி, கிரான், மட்டக்களப்பு)

யாழ்- வடமராட்சிப்பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எம்மைப்பிரிந்த -

**தைரியம்** (நடராசா ஆனந்தராசா-கொற்றாவத்தை, பொலிகண்டி, வல்வெட்டித்துறை, யாழ்.)

**வேல்ராஜ்** (அலுக்காஞ்சி வின்சன்ட் அமலதாஸ் - பலாலி, யாழ் )

இதே சம்பவத்தில் எம்மைப்பிரிந்த நாட்டுப்பற்றாளரான —

**குயிலன்** (இரத்தினம் வர்ணகுலசிங்கம் - ஊறணி, வல்வெட்டித்துறை, யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/4705]

### சிந்தனைக்கு

அநீதியைத் தாங்குபவனை விட,
அநீதி இழைப்பவனே, என்றும்
அதிக அவதியுறுவான்.

— பிளேட்டோ

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 16- 07- 1992
தொலைபேசி
ஆசியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## "அநியாயமான போர்"

"அநியாயமான வடக்கு கிழக்கு யுத்தம் நீடிக்காது விட்டால் ஆசிரியர்களுக்கு இதைவிட அதிக சலுகைகள் வழங்கப்பட முடியும்" இவ்வாறு கம்பளை சாகிராக் கல்லூரியின் பொன்விழாக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு பேசிய சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்தார்.

சிறிலங்கா ஜனாதிபதி தெரிவித்துள்ளது போன்று யுத்தம் நீடிக்காது விட்டால் ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகரித்து வழங்கக் கூடிய ஒரு நிலை ஏற்படுவது சாத்தியப்படக் கூடியது ஒன்றுதான். யுத்தத்தின் காரணமாக கட்டுக்கடங்காமல் அதிகரித்துச் செல்லும் செலவினம் கல்வி, சுகாதாரம் ஆகியவற்றில் அரசாங்கம் மேற்கொள்ளும் செலவீட்டில் பெரும் வெட்டையும் இத்துறைக்கு மேலதிக செலவீட்டைச்செய்ய முடியாமல் தடைகளையும் ஏற்படுத்துகின்றது.

இன்று இலங்கையின் மொத்த உள்ளூர் உற்பத்தியில் சுமார் 5.7 வீதத்திற்கு மேல் இராணுவச் செலவீட்டிற்கு பயன்படுத்தப்படுகின்றது. இது அரச செலவீட்டில் 20 வீதத்திற்கும் மேலாகும். இந்நிலையானது உலக நாடுகளின் சராசரி இராணுவச் செலவீட்டை விட அதிகமானதாகும். உலக நாடுகள் சராசரியாக மொத்த உற்பத்தியில் 4.5 வீதத்தை பாதுகாப்புக்கு எனச் செலவிடுகின்றன.

இராணுவச் செலவீடுகள் கட்டுக்கடங்காமல் அதிகரித்துச் சென்றதினால் சுகாதாரம், கல்வி. என்பன பாதிக்கப்பட்டதற்கு தென்னாசியாவில் பாகிஸ்தான் சிறந்த உதாரணமாகக் காட்டப்படுவதுண்டு. பாகிஸ்தானின் தேசிய உற்பத்தியில் 7.2 வீதத்திற்கு மேல் பாதுகாப்புச் செலவினத்திற்கு ஒதுக்கப்படுகின்றது. இது பாகிஸ்தான் அரசாங்கத்தின் செலவீட்டில் 27 வீதத்திற்கும் மேலாகும். இதனை கல்வி, சுகாதாரம் என்பன வற்றைப் புறக்கணித்தே பாகிஸ்தான் அரசாங்

## மூன்றாம் உலக நாடுகளின்
# இராணுவ தளபாட உற்பத்திகள் மீது
# சி.ஐ.ஏ.தீவிர கண்காணிப்பு

உபகண்டத்திலுள்ள இந்தியா, பாகிஸ்தான், உட்பட ஈரான் லிபியா, வடகொரியா ஆகியவற்றின் மீது அமெரிக்காவின் மத்திய புலனாய்வு நிறுவனமான சி. ஐ. ஏ. அதிகரித்த கண்காணிப்பைச் செலுத்தத் தொடங்கியுள்ளது. இந் நாடுகளின் ஆயுத உற்பத்திகள் தொடர்பாக சி. ஐ. ஏ.க்குக் கிடைத்த ரகசியத் தகவலைத் தொடர்ந்தே அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் சம்மதத்துடன் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ''லொஸ் ஏஞ்சல்ஸ் ரைம்ஸ்'' தெரிவித்துள்ளது.

பாரம்பரிய மற்றும் பாரம்பரியமில்லாத இராணுவ தளபாட உற்பத்தித் திட்டங்களின்மீது கண்காணிப்பை அதிகப்படுத்துமாறு சி. ஐ.ஏ. கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது இந்தியா மற்றும் பாகிஸ்தான் மீது ஆயுத உற்பத்தியைக் கட்டுப்படுத்துமாறு அமெரிக்கா தொடர்ச்சியாக விடுத்துவந்த நெருக்குதல்கள் புறக்கணிக்கப்பட்டதைத் தொடர்ந்துஇந்த இரு நாடுகளையும் அமெரிக்கா சந்தேகக்கண்களுடனேயே பார்த்து வருகின்றது.

இந்தநாடுகள்ஒவ்வொன்றின் மீதும் அமெரிக்காவிற்குள்ள சந்தேகங்களை தனித்தனியாக 'லொஸ் ஏஞ்சல்ஸ் ரைம்ஸ்' விளக்காத போதிலும் கூட அமெரிக்காவின் புலனாய்வுத் திறமையை வலுப்படுத்தி விரிவுபடுத்துவதற்காக கடந்த டிசம்பரில் ஆரம்பிக்கப்பட்ட ஆயுதக் கட்டுப்பாட்டுக்கான நிலையம் இது தொடர்பான பல தகவல்களைக் கண்டுபிடித்துள்ளதாக சி, ஐ ஏ. தரப்பு பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

உலகம் முழுவதிலும் உள்ள இராணுவ உற்பத்திச்சாதன உற்பத்தி வடிவமைப்பு, முன்னேற்றம் போன்றவற்றில் இவ்வமைப்பு தன்னுடைய கவனத்தைச் செலுத்துகின்றது. இவ்வாறான ஆயுத உற்பத்தியில் ஏற்படக் கூடிய அதி நவீன முன்னேற்றங்களைத் தடுத்து நிறுத்துவதே இவ்அமைப்பின் முக்கிய நோக்கமாக உள்ளது.

இந்த ஆயுத உற்பத்திகள் தொடர்பாக அமெரிக்கா தற்போது மேற்கொண்டுள்ள கண்டுபிடிப்புக்களை அடுத்து தம்முடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்கான அதிகாரத்தை ஜனாதிபதி புஷ் சி. ஐ ஏ.க்கு வழங்கியுள்ளார். புஷ் முன்பு சி. ஐ, ஏ.யின் தலைவராகப் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இக் கண்டுபிடிப்புகள் சி.ஐ. ஏ. யையும் அமெரிக்காவின் ஏனைய புலனாய்வு அமைப்புக்களையும் ஆயுதக் கட்டுப்பாட்டை மேற்கொள்வது அவர்களுடைய முக்கியமான நோக்கங்களில் ஒன்றாக இருக்க வேண்டுமென நிர்ப்பந்தித்துள்ளது.

இது மறைமுக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான வழியைத் திறந்துவிட்டுள்ளதென அரசியல் அவதானிகள் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

> **மூன்றாம் உலக நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், ஈரான், வடகொரியா லிபியா ஆகிய நாடுகள் ஆயுத உற்பத்தியில் ஈடுபடுகின்றனவாஎன்பதைக்கண் காணிக்க அமெரிக்கா சி. ஐ. ஏயை முடுக்கி விட்டுள்ளது.**

இது ஆயுதங்கள் தொடர்பான ஆராய்ச்சியை அல்லது உற்டத்தியை அதனைச் சேமித்து வைப்பதை முறியடிப்பதற்காக மூன்றாம் உலக நாடுகளில் சதிச் செயல்களில் ஈடுபடுவதனை தூண்டும் இதைவிட செய்மதி மற்றும் உளவாளிகள் மூலமாக அதிகளவில் வேவு பார்க்க வேண்டிய தேவையையும் அமெரிக்காவுக்கு ஏற்படுத்தும்.

ஜனாதிபதியின் இந்த உத்தரவு ஒரு முக்கியத்துவம் வாய்ந்தது என இந்தப் பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் தனியான ஒரு கொள்கை மற்றும் இராணுவ ரீதியில் எதிரியாக இருந்த முன்னாள் சோவியத் யூனியன் மீதிருந்த அமெரிக்காவின் அச்சம் மூன்றாம் உலக நாடுகளான சில சிறிய நாடுகளின் மீது திசை திரும்பியுள்ளதை இது காட்டுகிறது

ஆயுத உற்பத்தி முன்னேற்றத் திட்டங்கள் 1970, 1980 களில் பத்து வரையிலான அபிவிருத்தி அடையும் நாடுகளுக்கு பரவியிருந்தது. இது 1990 களில் அணுவாயுத உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. அல்லது அவை ஆயுதங்களை உற்பத்தி செய்துள்ளன என இந்தப் பத்திரிகை அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளையில் 22 நாடுகள் இரசாயன அல்லது உயிரியல் ஆயுதங்களின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளஅதேவேளையில் ஏவுகணை உற்பத்தியில் 25 நாடுகள் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தவருடத்தில் சோவியத் யூனியன் உடைந்த பின்னர் ஆயுதங்களால் ஏற்படக்கூடிய அபாயம் இந்த நாடுகளை நோக்கித் திரும்பியுள்ளதாக அமெரிக்க பாதுகாப்பு வட்டாரங்கள் சந்தேகம் கொண்டுள்ளன. இது உள்நாட்டு மற்றும் பிராந்தியப் பூசல்களுக்கு வழிகோலும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வளைகுடா யுத்தத்தின் முடிவில் ஈராக் வைத்திருந்த இரசாயன ஆயுதங்கள் பற்றிய தகவல்கள் ஐ. நா.சபையால் கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்தியா உட்பட மூன்றாம் உலக நாடுகளுக்கு இரசாயன, உயிரியல் ஏவுகணை தொழில்நுட்பம் செல்வதை தடுத்து நிறுத்த வேண்டுமென்று அமெரிக்கா முயன்று வருவது தெரிந்ததே.

எனினும் இதற்காக கடந்த ஒரு வருட காலத்தில் அமெரிக்கா மேற்கொண்டு வந்த முயற்சிகள் போதிய பலனைத் தரவில்லை. இதற்கென ஒதுக்கப்பட்ட நிதி வரையறுக்கப்பட்டதாக இருந்ததே இதற்கு காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நன்றி: வீரகேசரி

## குடும்பங்களை சிறிதாக்க நரசிம்மராவ் கோரிக்கை

(டில்லி)

இந்தியர்கள் தமது குடும்பங்களைச் சிறிய குடும்பங்களாக வைத்திருக்கவேண்டுமென்று எட்டுப்பிள்ளைகளின் தந்தையான பி. வி. நரசிம்மராவ் கடந்த சனியன்று புதுடில்லியில் நடைபெற்ற உலக சனத்தொகை தினத்தில் பேசும் போது கேட்டுக்கொண்டார்.

சிறிய குடும்ப அமைப்பு என்ற கருத்தை நாட்டில் பரப்ப அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளும் ஒரு

டுக்கு அமைவில்லாமல் உள்துறை அமைச்சர் சவானின் குடும்பத்திலும் எட்டுப்பிள்ளைகள் என்றும், அமைச்சர் அவையில் இவர்தான் பெரிய குடும்பஸ்தர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

சனத்தொகை, இந்தியாவில் 'கட்டுக்கடங்காத பிரச்சினை' என்று உலக சனத்தொகை தினத்தில் பேசிய சுகாதார குடும்பநல அமைச்சருக்கும் ஐந்து பிள்ளைகள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

2025 ஆண்டளவில் உல

## மசூதியை பாதுகாக்கத் தவறின் மாநில அரசு கலைக்கப்படும்
### - மத்திய அரசு எச்சரிக்கை

(டில்லி)

இராமர் கோயில் கட்டுவதால் அயோத்தியா பள்ளிவாசலுக்கு எத்தகையதொரு பழுதுமேற்படக்கூடாதென பாரதீய ஜனதாக்கட்சியுட்பட அனைத்துப் பிரதான இந்திய அரசியல் கட்சிகளும் அறிவித்துள்ளன.

பள்ளிவாசலை உடைக்க விடுவதில்லையென அரசு பத்

மேற்படுமென அறிவித்துள்ளது.

ஆனால் 16-ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட புராதன பள்ளிவாசலை பாதுகாக்க உத்தரப்பிரதேச மாநில அரசு தவறினால் அது பதவி நீக்கம் செய்யப்படுமென மத்திய அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

## சிவநாயகத்தின் றிட் மனு; உயர்மன்றத்தால் நிராகரிப்பு

(சென்னை)

துக்கு அடுத்தான பேர்வழியா

னத்திற்கு ஒதுக்கப்படுகின்றது. இது பாகிஸ்தான் அரசாங்கத்தின் செலவீட்டில் 27 வீதத்திற்கும் மேலாகும். இதனை கல்வி, சுகாதாரம் என்பனவற்றைப் புறக்கணித்தே பாகிஸ்தான் அரசாங்கத்தால் மேற்கொள்ள முடிகின்றது.

தென்னாசியாவில் இலங்கை கல்வி, சுகாதாரம் என்பனவற்றில் குறிப்பிடக் கூடிய முன்னேற்றமடைந்த நாடாகும். இதற்கு 'சுதந்திரமடைந்த' காலத்தில் இருந்து இவற்றில் மேற்கொள்ளப்பட்டு வந்த கவனமும், அதிகரித்த நிதி ஒதுக்கீடுமே காரணமாக இருந்தது. இவ்வாறு ஒதுக்கீடு செய்வதற்கு வாய்ப்பாக மிகவும் குறைந்தளவாக இருந்த இராணுவச் செலவீடு காரணமாய் இருந்தது.

ஆனால், இன்று நிலைமை தலை கீழாகமாறியுள்ளது. 1982ஆம் ஆண்டில் இலங்கையில்பாதுகாப்புச் செலவீனமென நாட்டின் மொத்த உற்பத்தியில், 1.16 வீதமாகவே இருந்தது. இது அரசாங்கத்தின் செலவீட்டில் 2.90 வீதமாகும். இந்நிலையானது 1971ஆம் ஆண்டு ஏப்ரல் கிளர்ச்சிக்கு முன்புஇன்னும் குறைவாக இருந்தது. இந்நிலையே இலங்கையின் கல்வி அபிவிருத்திக்கும், சுகாதார விருத்திக்கும் சாதகமாக இருந்தது, ஆனால், கடந்த பத்து ஆண்டுகாலப் பகுதிக்குள் பாதுகாப் செலவிடு சுமார் 700 வீதத்திற்கும் மேலாக அதிகரித்துள்ளது. இந்நிலையானது கல்வி,சுகாதாரம் என்பனவற்றிற்கான ஒதுக்கீட்டிற்குத் தடையாகவுள்ளது.

யுத்தம் இவ்வாறு செலவீட்டை அதிகரித்திருப்பது என்பது உண்மைதான். ஆனால், இவ் அநியாயமான யுத்தத்திற்கு யார் காரணம்? இதைத் தொடர்ந்து நடத்திச் செல்பவர்கள் யார்? இவ்விரு கேள்விக்கும் பதில் சிங்கள ஆட்சியாளர்களே நாட்டின் வளத்தை வீணடிக்கும் இவ்யுத்தம் அநியாயமானது எனத் தெரிந்து கொண்டும் அரசியல் பிரச்சினை ஒன்றிற்கு இராணுவத் தீர்வையே சிறிலங்கா அரசுநாடிநிற்கின்றது. அதாவது அநியாயமாயினும் ஆக்கிரமிப்புப் போரை நடத்தியே தீருவதென பௌத்த பேரினவாதம் முடிவு செய்துள்ளது. இந்நிலையில் கல்வி என்ன, சுகாதாரமென்ன எல்லாம் இரண்டாம் பட்சம் தான்.

---

டார்.

சிறிய குடும்ப அமைப்பு என்ற கருத்தை நாட்டில் பரப்ப அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளும் ஒரு முகப்பட்ட முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று உலகின் இரண்டாவது பெரிய சனத்தொகை கொண்ட நாட்டின் 74 வயது நிரம்பிய பிரதமர் நரசிம்மராவ் கூறினார்

''நாம் இருவர் நமக்கு இருவர்'' என்ற அரசின் இலட்சியக் குடும்பக் கோட்பாட் ... தொகை தினத்தில் ... சுகாதார குடும்பநல அமைச்சருக்கும் ஐந்து பிள்ளைகள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

2025 ஆண்டளவில் உலகில் அதிக சனத்தொகை கொண்ட நாடான சீனாவை இந்தியா முந்தி விடும் என்று கணிப்புக்கள் தெரிவிக்கின்றன. ஒவ்வொரு மணிநேரமும் இந்தியாவின் சனத்தொகை 2,000த்தினால் அதிகரிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

---

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக

## 40 பேர் மீது குற்றச்சாட்டு; 20 பேர் உயிருடன் இல்லை

(லண்டன்)

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் தனுவும் மற்றவர்களும் புலிகள் அமைப்புத் தலைமையின் பணிப்புரைக்கிணங்கச் செயற்பட்டார்களா என்பது நிலைநாட்டப்படவில்லை என்று லண்டன் ரைம்ஸ் இதழில்அதன் செய்தியாளர் கிறிஸ்தோப்பர் தொமஸ் சென்னையிலிருந்து தெரிவித்துள்ளார்.

அவர் தமது செய்திக்குறிப்பில், ஒரு வருடத்துக்கு முன்னர்ராஜீவ்காந்தியைக்கொலை செய்தார்கள் என்று 40 பேர் மீது சென்னையில் மே 20ஆம் திகதி குற்றம் சுமத்தப்பட்டது. எவ்வாறாயினும் குற்றம்சாட்டப்பட்டவர்களில் 29 பேர் இன்று உயிருடன் உள்ளனர். மற்றவர்கள் ராஜீவ் காந்தி குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர். சிலர் சயனைட் அருந்தித் தற்கொலை செய்துள்ளனர் என்றும்,

நீதிமன்றமும் சிறைச்சாலையும் சேர்ந்தாற்போல் சென்னைக்கருகில் அமைக்கப்பட்ட இடத்தில் ஒக்ரோபர் அல்லது செப்டம்பரில் நீண்ட விசாரணை ஆரம்பமாகவுள்ளது என்றும்,

புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் சிறிலங்காவின் வட பகுதிக் காடுகளில் மறைவிடத்தில் வாழ்ந்து வருகிறார். இந்த அரசியல் கொலையைச் செய்தவர்கள் புலிகள் தான் என்று இந்தியா தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது. ஆனால் புலிகள் இக் கூற்றை மறுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அரச அறிக்கைகளிலும் ஆசிரியத் தலையங்கங்களிலும் ஊகிக்கப்படும் குற்றச்சாட்டுகள் ஒருபுறமிருக்க, புலிகள் அமைப்புகள்இல்லாத ஆனால் புலிகள் மேல் அதிருப்தி கொண்ட சிலர் ராஜீவ்காந்தி கொலைத் திட்டத்தைத் தீட்டியிருக்கலாம். 'புலிகள் காந்தியைக் கொல்லவில்லை' ஸ்ரேஸ்மென் இதழில் சாமுவல் ராஜப்பா எழுதுகிறார்.

ராஜீவ் காந்தி கொலையின் பின்னால் வேறு குழுக்கள் அல்லது நபர்கள் இருந்திருக்கலாம் என்ற சாத்தியக் கூறுகள் பற்றி எழுதுவது முடியாத காரியம் என்று ராஜப்பா எழுதுகிறார். அப்படி எழுதுபவர்கள் மீது புலிகள் என்று குற்றம் சாட்டப்படும் என்று ராஜப்பா கூறுவதாக லண்டன்ரைம்ஸில் கிறிஸ்தோப்பர் தொமஸ் தெரிவிக்கிறார்.

---

அரசியல் கட்சிகளும் அறிவித்துள்ளன.

பள்ளிவாசலை உடைக்க விடுவதில்லையென அரசு பத்துக்கோடி மக்களுக்கு உத்தரவாதமளிக்க வேண்டுமெனவும் பள்ளிவாசலை இடித்து கோயில் கட்ட ஹிந்து தீவிரவாதிகளுக்கு அனுமதிக்கப் போவதில்லையெனவும் இந்திய மத்திய அரசு உத்தரவாதமளிக்க வேண்டுமெனவும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் அறிக்கை வெளியிட்டுள்ளது.

விஷ்வ ஹிந்து பரிசத் என அழைக்கப்படும் உலக இந்து சபை கோயில் கட்டுவதில் ஈடுபட்டுள்ளது கோயில் கட்டப்படுவதனை உயர் நீதிமன்றம் தடை செய்யவில்லை. ஆனால் பிரச்சினைக்குரிய பகுதியில் நிரந்தரக் கட்டிடம் அமைக்கக்கூடாதென கட்டளை இட்டுள்ளது.

இந்நிலையில் அயோத்தியாவை உள்ளடக்கிய பிரதேசத்தில் மாநில ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள பாரதீய ஜனதாக்கட்சி - மத்திய அரசு தலையிட்டால் பெரும் குழப்ப

---

## யுத்த நிறுத்தம் ஏற்படுத்த யூகோ. பிரதமர் உறுதி

(பெல்கிரேட்)

பொஸ்னியா - சர்சகோவினாவில் உடனடியாக யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கு யூகோஸ்லாவிய சமஷ்டி அரசாங்கம் சகலதையும் செய்யும் என்று புதிய பிரதம மந்திரி தெரிவித்துள்ளார்.

யூகோஸ்லாவிய நெருக்கடிக்குத் தீர்வு காண பொஸ்னியாவிலும், ஏனைய குடியரசுகளிலும் அமைதியும் ஸ்திரப்பாடும் நிலவுவது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

---

## அன்னை திரேசாவுக்கு யுனெஸ்கோ பரிசு

(பரிஸ்)

கல்கத்தாவைச் சேர்ந்த திரேசா அம்மையாருக்கு வருடந்தோறும் அளிக்கும் சமாதான கல்விப் பரிசை அளிக்கப் போவதாக ஐக்கிய நாடுகள் கலாசார ஏஜென்சியான யுனெஸ்கோ கடந்த வியாழனன்று அறிவித்தது.

ஏழை மக்களின் சேமநலன்களுக்காகவுப் சமாதானத்துக்காகவும் அநீதிகளை ஒழிப்பதற்காகம் உழைத்துவரும் எண்பத்தொரு வயதான திரேசா அம்மையாருக்கு இந்தப் பரிசு வழங்கப்படுகிறது,

திரேசா அம்மையார் பாரிசிலுள்ள யுனெஸ்கோவின் தலைமைக்காரியாலயத்தில் இப்பரிசைப் பெற்றுக் கொள்ள உள்ளார். இப்பரிசை வழங்குவதற்கான திகதியை இன்னும் யுனெஸ்கோ ஸ்தாபனம் அறிவிக்கவில்லை.

---

## உயர்மன்றத்தால் நிராகரிப்பு

(சென்னை)

இந்திய தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ்நேசன் ஆசிரியர் எஸ். சிவநாயகம் தடுப்புக் காவல் உத்தரவை ரத்துச் செய்யுமாறு சமர்ப்பித்த றிட் மனுவை சென்னை உயர் நீதி மன்றம் நிராகரித்துள்ளது.

சிவநாயகம் சமர்ப்பித்தறிட் மனுவில் அடங்கியுள்ள விடயத்தை விசாரிக்க அதிகாரமற்ற சென்னை உயர் நீதி மன்றம் சிவநாயகத்தைத் தடுத்து வைத்திருப்பது நியாயமா, இல்லை அல்லது சிவநாயகம் தேசிய பந்தோபஸ்துக்கு ஆபத்தான பேர்வழியா என்பது பற்றி எதுவும் தெரியப்படுத்தவில்லை.

இதனைத் தொடர்ந்து சிவநாயகம் டில்லி உச்ச நீதி மன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார் மனுமீதான விசாரணை இம் மாதம் நடுப்பகுதியில் இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது இதேவேளை சிவநாயகத்தை ஒரு வருடகாலம் தடுப்புக் காவலில் வைக்கும் படி நீதி மன்றம் வழங்கிய ஆணை இம் மாதம் 20 ஆம் திகதியுடன் காலாவதியாகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

---

ஜம்முகாஷ்மீர் குறித்த

## சட்டங்களை அமுல்படுத்த ஜனாதிபதிக்கு அதிகாரம்

(டில்லி)

ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கான சட்டங்களை இயற்றுவதற்காக ஜம்மு காஷ்மீர் சட்டமன்றத்தின் அதிகாரங்களை ஜனாதிபதிக்கு அளிக்க வகை செய்யும் மசோதா ஒன்றினை லோக்சபா ஆமோதித்தது.

நேற்று முன்தினம் லோக்சபாவில் பலமணிநேரமாக நடைபெற்ற விவாதத்திற்கு பின்னர் 163 ஆதரவு வாக்குகள் பெற்று ஆமோதிக்கப்பட்டது.

---

## விமான விபத்தில் 29 பேர் பலி

ரஷ்யாவில் ஏற்பட்டுள்ள விமான விபத்தொன்றில், 29 பேர் இறந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய இராணுவத்தினரது குடும்பங்களை ஏற்றிக் கொண்டு சென்ற ஜெற் பயணிகள் விமானம் ஒன்றே நேற்று முன்தினம் விபத்துக்குள்ளானது. இந்த விமானம் விழுந்து நொருங்கியதாகவும், ஆனால் விபத்துக்கான காரணம் குறித்து இதுவரை எதுவும் அறிவிக்கப்படவில்லை.

ஈழநாதம்

# சிறு நீர்ப்பாசன குளங்கள் புனரமைப்பு ஆரம்பம்

இன்று காலை 8.30 மணியளவில் குளப் புனரமைப்பு வேலைகள் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

யாழ். மாவட்ட தளபதி திரு. செல்வராஜா, யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. இளம்பருதி, யாழ். மாவட்ட தமிழீழ ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டு வைபவரீதியாக உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள சீலம்பாய் குள வாய்க்கால் புனரமைப்பு வேலைகளை ஆரம்பித்து வைக்கின்றனர்.

இவ்வாண்டு யாழ். குடாநாட்டிற்குள் முப்பத்தாறு குளங்களும், ஆறு வாய்க்கால்களும் புனரமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மூன்று குளங்களும் ஒரு வாய்க்காலும் சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மூன்று குளங்களும், கோப்பாய் உ.அ.அ. பிரிவில் ஆறு குளங்களும், நல்லூர் உ.அ.அ. பிரிவில் இரு வாய்க்கால்களும், சாவகச்சேரி உ.அ.அ. பிரிவில் ஒன்பது குளங்களும, இரு வாய்க்கால்களும், மருதங்கேணி உ.அ.அ. பிரிவில் இரண்டு குளங்களும், ஒரு வாய்க்காலும், சண்டிலிப்பாய் உ.அ.அ. பிரிவில் நான்கு குளங்களும், கரவெட்டி உ.அ.அ. பிரிவில் நான்கு குளங்களும், பருத்தித்துறை உ.அ.அ. பிரிவில் ஐந்து குளங்களும் புனரமைக்கப்படவுள்ளன.

தமிழீழப் பிரதேசத்தில் நீர் வளத்தினைப் பேணும் பொருட்டு காலம் காலமாக விடுதலைப்புலிகளினால் குளப் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்முயற்சியின் கீழ் கடந்த ஆண்டு மூன்றுமாத காலத்திற்குள் முப்பத்தொரு குளங்கள், முப்பத்திரண்டு வாய்க்கால்கள், ஐந்து உவர்நீர்தடுப்பு அணைக்கட்டுக்கள் இரு வடிகால்அமைப்புக்கள் புனரமைக்கப்பட்டன. இதன் மூலம் 8,500 வரையிலான குடும்பங்கள் பயன் அடைந்தன. கடலைச் சென்றடையும் நீரின் அளவு குறைக்கப்படவும், குடாநாட்டின் நீர்வளத்தை பேணவுமாக இத்திட்டம் மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத் தக்கது.

இக் குளப் புனரமைப்பு வேலைகளில் தமிழீழ மக்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

## அயோத்தியில் மேடை தற்காலிகமானது அல்ல

அயோத்தியாவில் சர்ச்சைக்குரிய பகுதியில் கட்டப்பட்டுள்ள மேடை அமைப்பு தற்காலிகமானது எனக் கூறிவிடமுடியாது என்று அங்குசென்று திரும்பிய மத்திய அரசின் அதிகாரிகள் குழு கூறியுள்ளது.

இந்த அறிக்கை இந்திய நாடாளுமன்றத்தின் இரு சபைகளிலும் நேற்று தாக்கல் செய்யப்பட்டது.

## விபுலானந்தர் நூற்றாண்டு விழா

தவத்திரு தனிநாயகம் அடிகளார் முத்தமிழ் மன்றத்தினால் சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழா யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது.

காலை நிகழ்ச்சிகள் 8. 30 மணிக்கு மத்தியூஸ் மண்டபத்திலும் மாலை நிகழ்ச்சிகள் 3. 30 மணிக்கு மதுரம் சதுக்கத்திலும் தொடங்கும்.

## கறுக்காய்

வீரச்சாவைத் தழுவிக் கொண்ட கப்டன் சாதணன் (மாதா) றப்பியல் அந்தோனி ராசா தொட்டியடி முல்லைத்தீவு, கப்டன் தேனுகா (சிவலிங்கம் மதனிகா வாசிகசாலை உடுப்பிட்டி) ஆகியோருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## அயோத்தியில் சர்ச்சைக்குரிய பகுதியில்

# ராமர் கோயில் கட்டுவதை அரசாங்கம் அனுமதியாது

### - நரசிம்மராவ்

(டில்லி)

அயோத்தியில் ராமர் கோயிலைக் கட்டுவதை காங்கிரஸ் கட்சியும் தமது அரசும் ஆதரிக்கும் அதே சமயம் சர்ச்சைக்குரிய பகுதியில் கோயில் கட்டுவதை அனுமதிக்க முடியாது என்றும் இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் தெரிவித்தார்.

நேற்று இந்தியப் பாராளுமன்றத்தில் நரசிம்மராவ் அரசுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர், மேலும் கூறுகையில் உச்ச நீதிமன்றத்தின்உத்தரவுகளை உத்தரப்பிரதேசம் மீறாத வகையில் மத்திய அரசு பார்த்துக் கொள்ளும் என்றும் தெரிவித்தார். இந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் அர்ஜுன்சிங் கூறுகையில் நாட்டில் மதவெறியை கிழறிவிட சில சக்திகள் முயலுவதாகவும், நிலைமையைப் பற்றிக் கவலைப்படாமல் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதைப் பற்றி மட்டுமே சில சக்திகள்சிந்திப்பதாகவும் தெரிவித்தார்.

இவ் விவாதத்தில் பேசிய உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான் நீதிமன்ற உத்தரவுகளை மீறி உத்தரப்பிரதேச அரசு செயற்படுமேயானால் அரசியலமைப்பு சட்டத்தின் 356ஆவது பிரிவை பயன்படுத்த மத்திய அரசு தயங்காது எனத் தெரிவித்தார்.

## மக்கள் நல்லெண்ணத்தை ராவ் அரசு இழந்துவிட்டது

### - பாரதீய ஜனதா குற்றச்சாட்டு

(டில்லி)

கடந்த ஒரு ஆண்டுகளுக்கு முன்பிருந்த மக்கள் ஆதரவையும் நல்லெண்ணத்தையும் நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் அமைச்சரவை இழந்து விட்டதுஎன்று நேற்று இந்திய பாராளுமன்றத்தில் ராவ் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப்பிரேரணையை தாக்கல் செய்து பாரதீய ஜனதாக்கட்சியின் எம்.பியான யஸ்வந்த் சிங் கூறினார்

அவர் மேலும் பேசுகையில் பொருளாதார பின்னடைவு, தேசியப் பாதுகாப்பு, மற்றும் தேசிய முக்கியத்துவம்வாய்ந்த பிரச்சினையில் தீர்வு காணப்படாமை என்பன போன்ற பல குற்றச்சாட்டுக்களையும் தெரிவித்தார்.

## புலிகள் குறித்த கொள்கை முன்னுக்குப்பின் முரணானது

### - பாரதீய ஜனதா கண்டனம்

காஷ்மீர், அஸாம் வடகிழக்குப் பிராந்தியம் மற்றும் விடுதலைப் புலிகளின் பிரச்சினை தொடர்பாகக் கடைப்பிடிக்கப்பட்டுவரும் மத்திய அரசின் கொள்கை முன்னுக்குப் பின் முரணானது இருமனப் போக்குடையது என்று பாரதீய ஜனதாக் கட்சி உறுப்பினர் யஸ்வன்சிங் லோக்சபாவில் தெரிவித்தார்.

இதேவேளை, மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் பேசுகையில் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை விசாரணைக்காக இந்த நாட்டுக்கு அனுப்பி வைப்பதில் சிறிலங்கா அரசு ஒத்துழைக்கும் என்றும், புலிகள் தொடர்பாக அரசு கொண்டிருக்கும் கருத்திலும் நிலையிலும் எந்த ஒரு மாற்றமும் இல்லையெனத் தெரிவித்தார்.

## விமான

செய்திகள் கூறுகின்றன.

முன்னாள் சோவியத்ரஷ்யாவுக்குச் சொந்தமான டோக்கோட்டா இராணுவ தாங்கியிலிருந்து தெற்குபேமனிர் முன்னாள் தலைநகருக்கு இந்த விமானம் சென்றது மோசமான காலநிலையால் இந்த விபத்து ஏற்பட்டது.

## மேஜர் முரளி விளையாட்டுப் போட்டி

(புங்குடுதீவு)

மேஜர் முரளி ஞாபகார்த்தமாக வேலணை கல்விக் கோட்டம் நடாத்தும் விளையாட்டுப் போட்டி 16 ஆம் திகதி வியாழக்கிழமை(இன்று) காலை முதல் புனித சம்பத்திரிசியார் (சென். பற்றிக்ஸ்) கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

★ ★ ★

பண்டத்தரிப்பு கோட்ட மட்டத்திலான மேஜர் முரளி ஞாபகார்த்த விளையாட்டு விழா இன்று அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 8.30 மணி முதல் 5.00 மணிவரை நடைபெறவுள்ள இவ் விளையாட்டு விழாவில் 104 பாடசாலைகள் பங்குபற்றவுள்ளன.

இன்றைய நிகழ்வில் கனிஷ்ட பிரிவுற்கான மெய்வல்லுனர்

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீர ஜனனம்: 3. 10. 1972

வீரமரணம் 16.07. 1991

### கப்டன் இளங்கோ

அன்பின் இளங்கோ நீ . . . மரணித்து விட்டாயா . .?

இல்லை

மாவீரன் ஆகிவிட்டாய் நீ எழுந்த போது ஆயிரம்ஆயிரம்

வேங்கைகள் கூடவே புறப்பட்டன. நீ மிளிர்ந்த போது

எதிரிகள் நடுங்க

மணலாறில் வீரத்தின் சிகரம் புலப்பட்டது.

நீ நடந்தபோது தோமர்கள் வியக்க உன் மருத்துவத்

நீர் எங்கள் தனிப்பெரும் வளம்.

நீரைப் பாதுகாக்க,

மழை நீரைத் தேக்குவோம்,

குளங்கள்,

வாய்க்கால்களைப்

புனரமைத்து

நீர் வளத்தைப் பேணுவதற்கு

முனைப்புடன் செயற்படுவோம்,

இன்று காலை 8. 30 மணிக்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சீலம்பாய் குளம் புனரமைப்புடன் இவ்வருட குளப்புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகின்றன.

## "ஒவ்வொரு துளி நீரையும் பயன் படுத்துவோம்"

உட்கட்டுமாணப்பிரிவு,

தமிழீழ ஆய்வு நிறுவனம்

தமிழீழ விடுதலைப்புலிகள்.

(சி-4713)

## நினைவினில் நீங்காத ஓர் ஆண்டு

## கரைஒதுங்கிய சடலம் யாழ். வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

குருநகர்ப பகுதியில் நேற்று இனம்தெரியாத ஓர் ஆணின் சடலம் கரை ஒதுங்கியது.

உடல் பருத்து சிதைந்த நிலையில் இச் சடலம் தமிழீழ காவல்துறையினரால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை தலையில் சூட்டுக்காயத்துடன் கரை ஒதுங்கிய மேற்படி சடலம் அடையாளம் காண்பதற்காக யாழ் போதனா வைத்தியசாலை பிரேதஅறையில் வைக்கப்பட்டுள்ளது. (ச, க)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்

எதிரிகள் நடுங்க
மணலாறில் வீரத்தின் சிகரம் புலப்பட்டது.
நீ நடந்தபோது தோழர்கள் வியக்க உன் மருத்துவத் திறமை வெளிப்பட்டது
நீ உன்னையே தமிழினத்திற்காய் ஈர்ந்தபோது
கண்ணீர் மழை கரை புரண்டது.
நீ எழுந்தது முதல் மடிந்தது வரை தமிழீழத்தின் இதயம்
மணலாறுக்காகவே உன்திறமைகள் அர்ப்பணிக்கப் பட்டது.
இன்று . . . . கோர யுத்தத்தில் வீரம் பிரகாசிக்கிறது
உன் கனவுகளை நனவாக்க.

பாரதி வீதி,
கம்பர் மலை,
வல்வெட்டித்துறை.

உன் பிரிவால் வாடும்
குடும்பத்தினர், உறவினர்கள்
நண்பர்கள்.

(2797)

# ஓராண்டு நினைவஞ்சலி



வீர உதயம்
25
—
01
—
1974

வீரச் சாவு
16
—
07
—
1991

## துணைப்படை வீரர் குட்டி

(கணேசலிங்க –சபேசன், நல்லூர்)


புகைவனின் வெறியை அடக்க
துணிவுடன் பணியை ஏற்று
துணைப்படை வீரனானாய்-அதனாலோ
மண்ணுக்கு வித்தானாய்!

(4707)

–நண்பர்கள்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.

# ஓர் ஆண்டு



ஆகா !
வென
நாம்மகிழ
வீரனாய்
பிறந்தது
01
—
01
—
1975

ஆ.ச வே'
பெருஞ்
சமரில்
வித்தாகி
வீழ்ந்தது
16
—
07
—
1991

## மாவீரன் 2-வது லெப்டினன்ட **மௌலி**

(தாமோதரம்பிள்ளை மணிவாசன்-சடேசன்)
கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்

தம்பி !
புத்தகப் பை தொங்கிய
உன் தோளில்
துவக்குக் கட்டையைத்
தொங்க விட்டது வரலாறு

பால் வடியும் முகத்தில்
படைத்தனம் குடியேறியது
உன் நெஞ்சில் விரவிய
விடுதலை வேட்கையின்
வெளிப்பாடு தானே

அன்று நீ —
அணைபோட முடியாத புயலாக
தலைவனின் சேனையில் புலியாகி
புறப்பட்டாய் மண்ணுக்காய் போராட
தாயவளின் மடி இங்குன்
தலைவைக்கத் தவித்திருக்க —
வெற்றிலைக்கேணியில் வீரச்சமராடி
தாயகத்தின் மடியெங்கும்
பரந்து படுத்திருந்தாய்

நாட்டின் துயர் போக்க
நல்ல சமர் புரிந்து - உன்னைப் போல்,
வீடு திரும்பாமல்
வித்தாகி வீழ்ந்து போன
மைந்தர்கள் எல்லோர்க்கும் —
சாத்துகிறோம்
கண்ணீரால் பூமாலை

குடும்பத்தினர், உறவினர்கள்,
நண்பர்கள்.

(சி'4711)

பிரிவுற்கான மெய்வல்லுனர் போட்டி தாச்சி, கயிறிழுத்தல், வலைப்பந்தாட்டம் மற்றும் உதைபந்தாட்ட நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

விடுதலைப் புலிகள் முக்கிய உறுப்பினர்கள் கலந்து கொள்ளும் இவ் விழாவின் இறுதியில் வெற்றிபெறுவோருக்கான சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ச)

ஒரு லட்சய

இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், இரு லொறிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளன என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாரத்தில்

இரா சுந்தரலிங்கம் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். மேலும் சேவை நிபந்தனைகள் கொடுப்பனவுகள் பற்றிய விபரங்கள் அனைத்தையும் கோட்டக் கல்விப் பணிமனையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம் எனவும், யாழ்ப்பாண பிரதேச கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

பலத்த

டம் சிக்கியதை அடுத்தே பாதுகாப்பான சிறைப் பகுதிக்கு இவர் மாற்றப்பட்டிருக்கிறார் என்றும் கூறப்படுகிறது.

18 முஸ்லிம்

பஸ்ஸிலிருந்து இழுத்து பின்னர் அவர்களை சுட்டுக் கொன்றனர் என்று சிறிலங்கா இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாமிமலைக்

ந்தனர். இவர்களைத் தேடி நூற்றுக்கும் மேற்பட்ட பொலிசார் தேடுதல் நடாத்தினர். இதன் காரணமாக இவர்கள் கைது செய்யப்பட்டதாக கூறப்பட்டது.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்
யாழ். கிளைத் தலைமையகம்

## பயிற்சிநெறிக்கான விண்ணப்பம்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கமும், தேசிய தொழில் பயிற்றுநர் சபையும் இணைந்து சுருக்கெழுத்து, உதவித்தாதியர், எழுதுவினைஞர், வாழைநார்த் தொழில், தெங்கு பனம் பொருளுற்பத்தி, கத்தாளை நார்ப் பொருளுற்பத்தி, பிரம்புப் பொருள் உற்பத்தி, பாய் நெய்தல், தையல், தோற்பொருளுற்பத்தி, நீர் இறைக்கும் இயந்திரத் திருத்துநர், மிதிவண்டி திருத்துநர், தகரத் தொழில், தச்சுத்தொழில், மட்பாண்டத்தொழில், இரும்புத்தொழில், கைத்தறித்தொழில் போன்ற துறைகளில் பயிற்சி நெறிகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளன. தெரியப்படும் பயிலுனர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் மாதாந்தம் ரூபா 450/- வழங்கப் படும். இத்துறைகளில் பயில விரும்புவோர் விண்ணப் பப்படிவங்களை செஞ்சிலுவைச் சங்கப் பிரிவுப் பணிமனைகளில் பெற்று பூர்த்தி செய்து, பிரிவுப் பணிமனைகளூடாக 19 - 07 - 1992 க்கு முன் யாழ். கிளைத் தலைமையகத்திற்குக் கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
15 - 07 - 92

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்
[சி, 4712]

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

15. 07. 1992

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்:- 4797

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-
26-2772, 26-4885, 41-4129, 26-4950, 27-8283, 42-3495, 26-7525, 42-3726, 36-6360, 26-4990, 24-0415, 26-495, 26-5474, 27-6579, 24-576, 27-920, 36-7200, 27-5823, 25-1380, 36-4133, 25-6314, 36-8393, 71-6774, 27-9740, 42-2857, 42-1320, 28-2511, 37-2035, 27-9764, 28-1901, 28-2049, 22-6922, 24-8714, 40-2677, 24-5127, 24-5939, 25-3013.

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-
27-2016, 41-9480, 40-6979, 24-4153, 28-1928, 42-0526, 28-2145, 40-1714, 24-2161, 43-1019.